# *Gates Industrial Corporation plc*
# *துன்புறுத்தல் மற்றும் பாகுபாடு எதிர்ப்புக் கொள்கை (Anti-Harassment and Discrimination Policy)*

**கொள்கை அறிக்கை**

Gates Industrial Corporation plc சம வேலை வாய்ப்பு மற்றும் பணியிடத்தில் சட்டவிரோதத் துன்புறுத்தல் அல்லது பாகுபாடு இல்லாமல் வைத்திருப்பது என்னும் கோட்பாடுகளில் அர்ப்பணிப்பு கொண்டுள்ளது. ஊழியர்கள் மற்றும் தொடர்பான பிற நபர்களிடம் (பயிற்சிப் பணியாளர்கள், விண்ணப்பதாரர்கள், ஒப்பந்த அல்லது தற்காலிகப் பணியாளர்கள் உட்பட) வயது, இனம், நிறம், பாலினம், பாலீர்ப்பு நிலை, பாலின அடையாளம் அல்லது வெளிப்பாடு, திருநங்கைகளின் நிலை, மதம், பிறந்த நாடு, மூதாதையர், குடியுரிமை, உடலூனம், ராணுவப் பணி ஓய்வு அல்லது திருமண நிலை, மரபணுவியல் தகவல்கள், கர்ப்பம், குழந்தைப் பிறப்பு அல்லது தொடர்பான மருத்துவ நிலைகள், அல்லது கூட்டமைப்பு சார்ந்த, மாநில அல்லது உள்ளூர்ச் சட்டத்தால் பாதுகாக்கப்படுகின்ற பொருந்தும் நிலையின் (கூட்டாக, “பாதுகாக்கப்பட்ட வகைப்பாடுகள்”) அடிப்படையில் சட்டவிரோதமாகப் பாகுபாடு காட்டுவதை அல்லது துன்புறுத்துவதை Gates அனுமதிக்காது.

**துன்புறுத்தல்**

சட்டவிரோத துன்புறுத்தல் மற்றும் பணியிட வன்முறை இல்லாத ஒரு பணிச்சூழலை பராமரிக்க Gates பாடுபடுகிறது. சட்டவிரோதத் துன்புறுத்தல் என்பது ஒன்று அல்லது அதற்குமேல் பல பாதுகாக்கப்பட்ட வகைப்பாடுகளின் அடிப்படையில் பணிச் சூழலை விரோதமான, புண்படுத்துகின்ற, அல்லது அச்சுறுத்துகின்ற விளைவைக் கொண்ட, திட்டமிட்ட அல்லது திட்டமிடாத எந்த ஒற்றைச் சம்பவமாகவும் அல்லது தொடர்ச்சியான நடத்தையாகவும் இருக்கலாம். அனுமதிக்கப்படாத நடத்தைகளில் பின்வருவனவும் அடங்கலாம்:

- கேலிச் சித்திரங்கள், மின்னஞ்சல், சுவரொட்டிகள், ஓவியங்கள், புகைப்படங்கள், அல்லது சமூக வலைத்தள இடுகைகள் போன்ற எழுத்துமூலமான அல்லது காட்சிபூர்வமான வடிவங்கள்.

- ஆபாசப் பேச்சுக்கள், மட்டமான பேச்சுக்கள், இழிவுபடுத்தும் வசைகள், எதிர்மறையாக வகைப்படுத்துதல் அல்லது எதிர்மறையான நகைச்சுவைப் பேச்சுக்கள் போன்ற சொல் ரீதியான நடத்தை.
- தாக்குதல், ஒருவரின் நடமாட்டத்தைத் தடுப்பது, அல்லது வன்முறைச் செயல்கள் (சொல் ரீதியானவை, சொற்களற்றவை ஆகிய இரண்டும்) போன்ற உடல் ரீதியான நடத்தை.

ஒரே பாதுகாக்கப்பட்ட வகைப்பாட்டில் இருக்கும் நபர்களுக்கு இடையே அல்லது அவர்கள் மத்தியில் தகாத பேச்சுக்கள் அல்லது நடத்தைகூட அனுமதிக்கப்படாத நடத்தையில் அடங்கலாம். இத்தகைய துன்புறுத்தல், அது ஊழியர்கள், மேற்பார்வையாளர்கள், மேலாளர்கள், ஆலோசனையாளர்கள், கட்சிக்காரர்கள், வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள், அல்லது Gates-உடன் தொழில் நடத்தும் பிற நபர்கள் என யாரால் செய்யப்பட்டாலும் சகித்துக்கொள்ளப்படாது. எல்லா ஊழியர்களும் ஊழியரல்லாதோரும் (வாடிக்கையாளர்கள், கட்சிக்காரர்கள், விற்பனையாளர்கள், ஆலோசனையாளர்கள் முதலானோர்) எல்லா சமயங்களிலும் தொழில்முறையான மற்றும் பணி மீதான கவனத்தோடு நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பாலியல் துன்புறுத்தல்**

பிற வடிவங்களிலான துன்புறுத்தலுக்குக் கூடுதலாக, Gates-இன் கொள்கையானது பாலியல் துன்புறுத்தலையும் தகாத பாலியல் நடத்தையையும் அனுமதிக்காது. பாலியல் துன்புறுத்தல் என்பது, சம்பந்தப்பட்ட நபர்களின் பாலினம் எதுவாக இருந்தாலும் பின்வரும் சூழ்நிலைகளில் விரும்பப்படாத பாலியல் முயற்சிகள், பாலியல் செயல்களுக்கான வேண்டுகோள்கள், மற்றும்/அல்லது பாலியல் தன்மையுள்ள பிற சொல் ரீதியான அல்லது உடல் ரீதியான நடத்தை என்று வரையறுக்கப்படுகிறது:

- இத்தகைய நடத்தைக்கு சரணடைவது வேலையில் சேர்த்துக்கொள்வதற்கான விதிமுறையாக அல்லது நிபந்தனையாக வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ ஆக்கப்படும்போது;
- இத்தகைய நடத்தைக்கு சரணடைவது அல்லது அதை நிராகரிப்பது ஒருவருக்கு வேலையளிப்பது குறித்த முடிவுகளுக்கான அடிப்படையாகப் பயன்படுத்தப்படும்போது; அல்லது
- இத்தகைய நடத்தைக்கு ஒரு நபரின் வேலைச் செயல்பாட்டில் குறுக்கிடும் நோக்கமோ விளைவோ இருக்கும்போது அல்லது அது பணிச் சூழலை அச்சுறுத்தல் நிறைந்ததாக, விரோதமானதாக, அல்லது புண்படுத்துவதாக ஆக்கும்போது.

அனுமதிக்கப்படாத நடத்தைகளில் பின்வரும் வடிவங்களில் பாலியல் ரீதியில் மறைமுகமான அல்லது வெளிப்படையான தொடர்புறுத்தல்களும் அடங்கலாம்:

- கேலிச் சித்திரங்கள், மின்னஞ்சல், சுவரொட்டிகள், நாள்காட்டிகள், ஓவியங்கள், புகைப்படங்கள், அல்லது சமூக வலைத்தள இடுகைகள், அல்லது தகாத, வயதுவந்தோருக்கான கருப்பொருளைக் கொண்ட அன்பளிப்புகள் போன்ற எழுத்துமூலமான அல்லது காட்சிபூர்வமான வடிவங்கள்.
- சொல் ரீதியான வடிவம்; எடுத்துக்காட்டாக, பேச்சுக்கள், நகைச்சுவைப் பேச்சுக்கள், வக்கிரமான அல்லது ஆபாசமான சொற்கள், வம்புப் பேச்சு, இன்னொருவரின் பாலியல் வாழ்க்கை பற்றிக் கேள்விகள் கேட்டல், விரும்பப்படாத பாலியல் முயற்சிகள், அல்லது விரும்பத்தகாத முறையில் திரும்பத் திரும்ப சந்திக்கக் கோருதல்.
- உடல் ரீதியான வடிவம்; எடுத்துக்காட்டாக, வக்கிரப் பார்வை, பாலியல் தன்மையுள்ள சைகைகள், அல்லது விரும்பப்படுவதாக இருந்தாலும் விரும்பப்படாததாக இருந்தாலும் தகாத முறையில் தொடுதல்.

பாகுபாடு

எந்தத் தொழில்வணிகப் பரிவர்த்தனைகளிலும், வேலையளிப்பிலும் அல்லது வேலையில் சேர்த்தல், வேலைக்கு எடுத்தல், ஊதியம், பதவி உயர்வு, நன்மைகள், ஒழுக்கம், வேலைநீக்கம், பணி ஒதுக்கீடுகள் அல்லது பயிற்சி உள்ளிட்ட வேலை தொடர்பான முடிவுகளிலும் சட்டவிரோதமான பாகுபாட்டை Gates சகித்துக்கொள்ளாது. Gates எல்லோருக்கும் சம வேலை வாய்ப்புகளை அளிப்பதில் பற்றுறுதி கொண்டுள்ளது.

**தொழில்முறையற்ற நடத்தை**

மிரட்டல், முரட்டுத்தனமான அல்லது அச்சுறுத்தும் பேச்சுக்கள் அல்லது நடத்தை, தகாத முறையில் முரட்டுத்தனமாக விளையாடுதல், எதிர்மறையாக வகைப்படுத்திப் பேசுதல், குறும்புச் செயல்கள், அல்லது புண்படுத்தும் பேச்சு போன்ற தொழில்முறையற்ற நடத்தையை Gates சகித்துக்கொள்ளாது. இந்த நடத்தையானது துன்புறுத்தல் ஆகலாம் அல்லது ஆகாதிருக்கலாம்; ஆனால் இது சக பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், அல்லது விற்பனையாளர்களைப் புண்படுத்துவதாக இருக்கக்கூடும். இது தொழில்முறை நடத்தை மற்றும் அறத்திற்கான Gates-இன் தரநிலைகளுக்குப் பொருந்தாதது.

புகார்ச் செயல்முறை

இந்தக் கொள்கையை மீறும் நடத்தைக்கு நீங்கள் உட்படுத்தப்படுவதாக நினைத்தால், நீங்கள் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

**செயல்படி 1:** உங்களுக்குத் தயக்கம் இல்லை என்றால், இத்தகைய நடத்தை விரும்பத்தக்கதல்ல என்று புண்படுத்தும் நபரிடம் சொல்லுங்கள், இத்தகைய நடத்தையை உடனே நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுங்கள்.

**செயல்படி 2:** அந்த நடத்தையை உடனே உங்கள் மேற்பார்வையாளரிடம் தெரிவியுங்கள். இருந்தாலும், இந்த விஷயத்தைப் பற்றி உங்கள் மேற்பார்வையாளருடன் பேசுவது முறையாக இருக்காது என்று நீங்கள் நம்பினால் அல்லது இந்த விஷயத்தைப் பற்றி உங்கள் மேற்பார்வையாளருடன் பேசத் தயக்கமாக இருந்தால், நீங்கள் இதை உங்கள் மேற்பார்வைச் சங்கிலியில் இருக்கும் இன்னொரு நபரிடம், பொருத்தமான மனிதவளத் துறைப் (Human Resources) பிரதிநிதியிடம், Gates சட்டத் துறையிடம் (Law Department) (compliance@gates.com), அல்லது அநாமதேயமாக நெறிமுறைகள் மற்றும் பின்பற்றல் உதவி எண்ணின் (Ethics and Compliance Hotline) மூலம் தெரிவிக்கலாம்:

இணையவழிப் படிவம்: gatescorp.ethicspoint.com
தொலைபேசி: நடத்தை நெறியின் (Code of Conduct) பின்னிணைப்பு A-வில் தரப்பட்டுள்ளபடி அல்லது gatescorp.ethicspoint.com-இல் உள்ளபடி

**செயல்படி 3:** கூடுதல் சம்பவங்கள் நிகழ்ந்தால், நீங்கள் மேலே பட்டியலிடப்பட்டுள்ள நபர்களில் ஒருவரைத் தேர்வுசெய்து உடனே அவரிடம் தெரிவிக்க வேண்டும்.

Gates இந்தத் துன்புறுத்தல் மற்றும் பாகுபாடு எதிர்ப்புக் கொள்கையைச் செயலாக்குவதில் பற்றுறுதி கொண்டுள்ளது. நிறுவனம் மேற்கொள்ளும் முயற்சிகளின் செயல்திறன், ஓரளவுக்கு முறையற்ற பணியிட நடத்தையைத் தெரிவிக்கும் ஊழியர்களைப் பொறுத்தது. இந்தக் கொள்கையை மீறும் நடத்தைக்கு நீங்களோ வேறொருவரோ உட்படுத்தப்பட்டிருக்கக்கூடும் என்று நீங்கள் நம்பினால், அதை நீங்கள் உடனே தெரிவிக்க வேண்டும்.

தெரிவிக்கப்படும் எந்தச் சம்பவமும் நிறுவனத்தால் உரிய நேரத்திலும் முழுமையாகவும் பாரபட்சமின்றிப் புலனாய்வு செய்யப்படும். நியாயமான அளவு முன்னேற்றம் ஏற்படுவதை உறுதிப்படுத்த Gates தகுந்த முறையில் ஆவணமாக்கமும் தடமறிதலும் செய்யும். புலனாய்வு முடிவடையும்போது, தீர்வு நடவடிக்கைகள் மற்றும் தீர்வுகளுக்கான பொருத்தமான விருப்பத் தேர்வுகளை Gates பரிசீலிக்கும். தவறான நடத்தை நிகழ்ந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டால், Gates பொருந்தும்படி உடனடியாகத் திருத்த நடவடிக்கையை மேற்கொள்ளும். புகார்களும் துன்புறுத்தல் அல்லது பாகுபாடு குறித்த புகார்களுக்குத் தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் சாத்தியமான வரை ரகசியக்காப்புடன் கையாளப்படும்.

**நிர்வாகத்தின் பங்கு**

தங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் எந்தத் துன்புறுத்தல், பாகுபாடு அல்லது தொழில்முறையற்ற நடத்தை பற்றிய கவலைகளையும் தகுந்த முறையில் தெரிவிப்பது Gates-இன் மேலாளர்களுடைய பொறுப்பாகும். ஒரு மேலாளர் இந்தக் கொள்கை மீறப்பட்டுள்ளதாக அல்லது மீறப்பட்டிருக்கக்கூடும் என்று ஒரு தெரிவிப்பைப் பெற்றால், அல்லது இந்தக் கொள்கையை மீறக்கூடிய நடத்தையை கவனித்தால், உடனே ஒரு புலனாய்வு நடத்தப்பட்டு பொருந்தினால் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வசதியாக உடனே மனிதவளத் துறையைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

**பதிலடி**

ஒரு துன்புறுத்தல் அல்லது பாகுபாடு பற்றி நிறுவனத்தால் அல்லது ஓர் அரசு செயலாக்க முகமையால் நடத்தப்படும் புலனாய்வு, நடவடிக்கை, அல்லது விசாரணை குறித்த தெரிவிப்புக்காக, புகார் தாக்கலுக்காக, வாக்குமூலம் அளித்ததற்காக, புலனாய்வில் உதவியதற்காக, அல்லது வேறு எந்த விதத்திலும் பங்கேற்றதற்காக எந்த ஊழியருக்கும் (பயிற்சிப் பணியாளர்கள், விண்ணப்பதாரர்கள், ஒப்பந்த அல்லது தற்காலிகப் பணியாளர்கள் உட்பட) மேற்பார்வையாளர்கள் மற்றும் மேலாளர்கள் உட்பட இத்தகைய இன்னொரு நபர் பதிலடி கொடுப்பதை Gates அனுமதிக்காது.

ஒரு தெரிவிப்பைச் செய்தமைக்காக அல்லது ஒரு புலனாய்வில் பங்கேற்பதால் உங்களுக்கு பதிலடி கொடுக்கப்படுவதாக நீங்கள் கருதினால், தயவுசெய்து மேலே சுருக்கமாகக் கூறப்பட்டுள்ள புகார்ச் செயல்முறைகளைப் பின்பற்றுங்கள். இந்தச் சூழ்நிலை பற்றித் தகுந்த முறையில் புலனாய்வு செய்யப்படும்.

**பொய்க் குற்றச்சாட்டுகள்**

Gates எல்லா குற்றச்சாட்டுகளுக்கும் முக்கியத்துவம் தருகிறது; இந்தக் கொள்கையில் அடங்கியுள்ள புகார்ச் செயல்முறையை முறையற்ற, தீங்கான அல்லது கெட்ட நோக்கமுள்ள காரணங்களுக்காகப் பயன்படுத்துவதை Gates அனுமதிக்காது. இதற்கேற்ப, Gates-இல் துன்புறுத்தல் மற்றும் பாகுபாட்டுக்கான புகார்ச் செயல்முறையைத் தவறாகப் பயன்படுத்தித் தெரிந்தே ஒரு பொய்ப் புகாரை அளிக்கின்ற அல்லது ஒரு அக புலனாய்வின்போது தெரிந்தே பொய்யான தகவல்களை அளிக்கின்ற எந்த ஊழியர் மீதும் Gates வேலைநீக்கம் வரையிலும் வேலைநீக்கத்தை உள்ளிட்டதுமான திருத்த நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**மீறல்கள்**

இந்தக் கொள்கை தொடர்பாக ஒரு உரிமை கோரலைச் செய்யும் ஒரு நபருக்கு பதிலடி கொடுப்பது உட்பட இந்தக் கொள்கையின் எந்த மீறலும் வேலைநீக்கம் வரையிலும் வேலைநீக்கத்தை உள்ளிட்டதுமான ஒழுங்கு நடவடிக்கைக்கு வழிவகுக்கலாம். மேலும், துன்புறுத்தல் அல்லது பாகுபாடு பற்றிய ஒரு தெரிவிப்பைப் பெற்று நிறுவனத்திற்குத் தெரியப்படுத்தத் தவறும் எந்த மேலாளரும் அல்லது மேற்பார்வையாளரும்கூட வேலைநீக்கம் வரையிலும் வேலைநீக்கம் உள்ளிட்டதுமான ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படலாம்.

**தொடர்பு கொள்ள வேண்டிய நபர்**

இந்தக் கொள்கை பற்றிய கேள்விகளுக்கு அல்லது கவலைகளுக்கு, உங்கள் மேற்பார்வையாளரை, மனிதவளத் துறையை, அல்லது Gates சட்டத் துறையை (compliance@gates.com) தொடர்பு கொள்ளுங்கள்.